**தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியுள்ளதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,387,914,441 ஆக இருந்த போதும் திறைசேரி அச்சு குறிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 2,406,625,548 ஆக இருந்தமையால் ரூபா 18,711,107 ஆன வேறுபாடு காணப்பட்டது. | இவ்வித்தியாசத்தை சரி செய்யுமாறு 2021 பெப்ரவரி 09 ஆந் திகதி மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | மீதிகளுக்கு இடையே வேறுபாடு களுக்குரிய காரணங்கள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அலுவலக உபகரணங்கள், மற்றும் தளபாடங்கள் முறையே ரூபா 1,771,919 மற்றும் ரூபா 1,489,698 என மீளாய்வாண்டின் கைதவிர்ப்பு பெறுமதி ரூபா 3,261,617 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதும் திறைசேரி அச்சுப் குறிப்பில் ரூபா 16,029,699 என காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 12,768,082 ஆன வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக் கொண்டுள்ளனர். | மீதிகளுக்கு இடையே வேறுபாடு களுக்கு காரணங்கள் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 கட்டுநிதி மீதி**

---------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் மொத்த பெறுவனவுகள் ரூபா 5,649,167,502 ஆக இருந்ததுடன் கட்டுநிதிக் கணக்கின் பிரகாரம் மொத்த பெறுவனவுகள் ரூபா 5,319,887,010 ஆக இருந்தமையால் ரூபா 329,280,492 ஆன வேறுபாடொன்று காணப்பட்ட போதும் வேறுபாடு என்னவென்பது தொடர்பாக கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் 3.6 குறிப்பிடப்பட்ட ஏ.சீ.ஏ – 01 முதல் 06 வரையான படிவங்களை அடிப்படையாக கொண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | மீதிகளுக்கு இடையே வேறுபாடுகளுக்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

----------------------------------------------------------------

மாத்தளை மாவட்ட செயலகத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
| --- | --- | --- |
| விடுமுறை பதிவேடு<br>-----------------------------------<br>நாவுல பிரதேச செயலகத்தின் விடுமுறை பதிவேட்டில் வெளிக்கள உத்தியோகத்தர்களின் முன்னர் பெற்றுக்கொண்ட விடுமுறைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு உத்தியோகத்தர்களின் விடுமுறை விபரங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் விபரங்கள் கிடைக்கவில்லை. சாரதிகளின் விடுமுறை விபரங்கள் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ளன. | தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.6.4 கணக்காய்விற்கு சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | யட்டவத்த பிரதேச செயலக பிரிவின் மொட்டுவெல அணைக்கட்டு வரை செல்லும் வீதியை அபிவிருத்தி செய்வதற்காக பட்டியலில் 09 ஆவது உருப்படியின் கீழ் ரூபா 65,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அப்பட்டியலுக்குரிய அளவீட்டு பத்திரத்தில் உரிய அளவீடுகள் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | அளவீட்டுப்பத்திரத்தில் குறித்த உருப்படியின் அளவீடுகள் குறிப்படாமை விடுபாட்டினால் இடம்பெற்றுள்ளதாக அறியத் தருவதுடன் வெளிக்கள பரிசோதனையின் போது தொழில்நுட்ப உத்தியோகத் தரிடமிருந்து பெற்றுக்கொண்ட வெளிக்கள அளவீட்டு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக | பட்டியலுக்குரிய அளவீட்டு பத்திரத்தில் உரிய அளவீடுகள் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ 3 படிவத்தில் 306/20 ஆம் இலக்க கட்டுநிதிக்குரிய ஏனைய மூலாதரங்களிலிருந்து பெறுவனவுகள் ரூபா 950,204,213 ஆன பெறுமதியொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதும் அம்மூலாதாரங்களை உறுதிப்படுத்துவதற்கு அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மாதாந்த கணக்குப் பொழிப்புக்களை தயாரிக்கும் போது அம்மாதத்தில் அம் மூலாதாரங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமே கட்டுநிதி வரவாக காட்டப்பட்டுள்ளது. | மூலதாரங்களை உறுதிப்படுத்துவத ற்கான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | கட்டுநிதி கணக்கில் புகையிரத திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 949,640 ஆன பெறுமதிக்காக அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்கனவே புகையிரத திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வரவு அறிவித்தல் கிடைத்தவுடன் கணக்காய்விற்கு அறிக்கையிடுவதாக | அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iv) | 2020 ஆம் ஆண்டிற்காக மாத்தளை பிரதேச செயலகத்தினால் சுத்திகரப்பு செயற்பாடுகளுக்காக 12 சந்தர்ப்பங்களில் ரூபா 978,000 தொகை தனியார் நிறுவன மொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் பிரதேச செயலகத்தினால் அவர்களின் வருகை மற்றும் வெளியேறல் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆரோக்கிய ஊழியர்களின் நிர்வாகம் அதற்குரிய சேவை வழங்குனர் கம்பனியால் மேற்கொள்ளப்படுவதுடன் பிரதேச செயலகத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட்ட வகையில் சேவை கிடைப்பதாக | குறித்த ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறல் தொடர்பாக உறுதிப் படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப் பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் மாவட்ட செயலகத்திற்கு 23 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து கிடைத்த ரூபா 10,663,878,000 இல் ரூபா 233,753,000 அதாவது 0.02 சதவீதம் முதல் 91.2 சதவீதம் வரையான வீச்சில் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அதிகமான நிதி ஏற்பாடுகள் ஆண்டின் இறுதி பகுதியில் ஒதுக்கீடு செய்வதால் காலம் போதியதாக இன்மை மற்றும் கட்டுநிதி பெற்றுக் கொள்வதற்கு சிக்கல்களின் பேரில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக | வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| லக்கல பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 198,021 ஆன கடன் மீதி அவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2002 யூன் 19 ஆந் திகதிய 1/2002 ஆம் இலக்க ஒன்றிணைந்த சேவைகள் சுற்றறிக்கை மற்றும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட 2009 பெப்ரவரி 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 1589/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 05 பிரதேச செயலகங்களில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவை புரிந்துள்ள உத்தியோகத்தர்களை இட மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இடமாற்றம் கோரப்பட்டுள்ள போதும் கிடைக்கவில்லை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2019 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறறிக்கையின் 02(I) ஆம் பந்தி | மாவட்ட திட்டமிடல் பிரிவு ரத்தொட்ட மற்றும் கலேவல பிரதேச செயலகங்களில் உத்தியோகத்தர்களின் கைவிரலடையால பதிவு மூலம் அலுவலகத்திற்கு வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | மாவட்ட செயலகத்தின் கைவிரலடையால இயந்திரம் சில சந்தர்ப்பங்களில் செயற்படாமல் இருந்ததுடன் கலேவல பிரதேச செயலகத்தில் எதிர்வரும் காலங்களில் கைவிரலடையால இயந்திரத்தின் மூலம் வருகை வெளியேறல் என்பவற்றை உறுதிப் படுத்துமாறு | சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் கைவிரலடையால இயந்திரங்கள் பதிவு செய்தல் மூலம் அலுவலகத்திற்கு வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் ரத்தொட்டை பிரிவில் நிறுவனத் தலைவராக அலுவலக நாட்களில் வருகை பதிவேட்டில் கையொப்பமிடப்படுகின்றது. | |
| (iii) | 2013 யூலை 05 ஆந் திகதிய HAF-3-ADMIN-02-002 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் கடிதம் | ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தரினாலும் அத்துமீறிய பிடித்துக் கொள்ளல் / நிர்மாணம் தொடர்பான அறிக்கையொன்று இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மாத்தளை மற்றும் கலேவல பிரதேச செயலகங்களின் கிராம சேவை உதீயோகத்தர்களால் அந்த அறிக்கை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வார அறிக்கைகளை வழங்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தி உள்ளதாக | அறிவுறுத்தல் கடிதத்தின் பிரகாரம் அத்துமீறிய பிடித்துக் கொள்ளல் / நிர்மாணம் தொடர்பாக தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | 2015 யூன் 12 ஆந் திகதிய HAF/01/ 01 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலகள் அமைச்சு செயலாளரின் கடிதம் | மாதாந்த முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னைய மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னரும் செய்யப்பட்ட வேலை அறிக்கை அடுத்த மாதத்தின் 05 ஆந் திகதிக்கு முன்னரும் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய போதும் மாவட்ட திட்டமிடல பிரிவின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் மாத்தளை பிரதேச செயலகத்தின் 40 உத்தியோகத்தர்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாவட்ட செயலகம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் மாத்தளை பிரதேச செயலகம் கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் | முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 08/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தி | மாத்தளை பிரதேச செயலக பிரிவின் கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகங்களில் பொருட் கணிப்பீடு 10 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருட் கணிப்பீட்டினை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2015 யூலை 07 ஆந் திகதிய BD/GSP/130/9/14/ MC - 11 ஆம் இலக்க நிதி அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 02 ஆம் பந்தி | ஸ்கூட்டர் பெற்றுக்கொண்ட இரண்டு உத்தியோகத்தர்கள் ரத்தொட்ட பிரதேச செயலகத்தின் ஸ்கூட்டருக்காக உரித்துப் பெறாத பதவி களுக்காக விடுவிக்கப் பட்டிருந்த போதும் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 197,000 தொகை 29 மாதங்கள் காலம் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. தொடர்ந்தும் கொடுப்பனவு செய்யாவிட்டால் சட்ட ஆலோசணை கோரி சட்ட நடவடிக்கைகள் எடுப்பதாக | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | 2018 யூலை 18 ஆந் திகதிய - 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | மிகை பதவியணியினருக்கு சம்பளம் செலுத்த முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதும் மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களால் 07 பதவிகளில் 19 மிகை பதவியணியினருக்காக 2020 சனவரி முதல் 10 மாதங்களுக்காக ரூபா 1,870,300 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப் பட்டிருக்கவில்லை. | மிகை பதவியணியினரை இடமாற்றம் செய்வதற்கு அல்லது அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 ஒப்பந்தம் தொடர்பாக வரிகளை அறவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரத்தொட்ட பிரதேச செயலக பிரிவின் மாஉஸ்ஸாகொல்ல லாக்ஷ் கிராமத்தின் பொது வசதிகள் நிலைய நிர்மாண செயற்திட்டத்தின் ரூபா 117,600 ஆன தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாமதக் கட்டணங்கள் இருந்தால் அதனை நிறுத்திவைத்தல் பணத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தாமத கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் செயற்திட்டங்களை குறித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் |

**2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் உக்குவல மற்றும் ரத்தொட்ட பிரதேச செயலகங்களில் ரூபா 1,043,811 ஆன உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | அதிளவு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டமையாலும் அதிக கடமைகளினாலும் இடம்பெற்றுள்ளதாக | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் உறுதிச் சீட்டுக்கள் சான்றுறு திப்படுத்தப்பட்டு கொடுப்பனவுகள் சேய்யப்பட வேண்டும் |

**2.6 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுப் பரிசோதனையினக் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மாத்தளை பிரதேச செயலகத்தின் சபிரி கமக் திட்டத்தின் பட்டகொல்ல வீதிக்கு அருகே உள்ள வடிகாண் மற்றும் பஹல சனசமூக மண்டபத்திற்கு செல்லும் வீதியின் மதகின் நீளம் நிர்ணயிக்கப்பட்ட அளவினை விட குறைவாக இருந்தமையால் ரூபா 31,266 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | நிறுத்திவைத்தல் பணத்திலிருந்து நடவடிக்கை எடுப்பதாக | செய்யப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) பள்ளெபொல பிரதேச செயலகத்தினால் மில்லவான மெதகம தாய்நல சிகிச்சை நிலைய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 170,106 தொகையான 21 மதிப்பீட்டு உருப்படிகளில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்காக 4.6 mm தடிப்பிலான கண்ணாடி பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்காக 2mm தடிப்பிலான கண்ணாடி பயன்படுத்தப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப உத்தியோகத்தரால் செய்யப்பட்ட பரிசோதனையில் உரிய அளவு காணப்பட்டதாக | உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள மிமீ கருத்திற்கொள்ளப்பட்டு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாத்தளை பிரதேச செயலகத்தின் சபிரி கமக் திட்டத்தின் கீழ் ரூபா 500,000 ஆன நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்தி தொரகும்புற உஹன கொடல்ல 15 குடும்பங்களுக்காக நீர் வசதிகள் வழங்கல் திட்டத்திற்கு குழாய்களை பதித்தல் மற்றும் வடி காண் வெட்டுவதற்காக ரூபா 29,538 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கோவைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதாக | நிறைவேற்றப்பட்ட நிர்மாணங்களில் நிறைவேற்றப்பட்ட உருப்படிகளில் மி மீ சரியாக அளவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மாவட்ட செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேர மணித்தியாலங்களைப் பெற்றுக் கொண்டு அதற்கு மேலதிகமாக அக்காலப்பகுதிக்காக இரத்தொட்ட பிரதேச செயலகத்தின் 04 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 15,606 ஆன விடுமுறை தின படிகள் வழங்கப்பட்டிருந்தன. | முன்அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | ஒரே காலப்பகுதிக்காக மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினப் படிகள் என இரண்டையும் வழங்கக் கூடாது அத்துடன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ரத்தொட்ட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் மண் சரிவு காரணமாக மக்கள் மீள் குடியேற்றத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளின் தகைமை சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்காக 07 மாதங்கள் முதல் ஓராண்டு வரை காலம் தாமதித்தமையால் அதற்காக கிடைத்த ரூபா 300,000 தொகை பொது வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தகைமை சான்றிதழ் கிடைத்த பின் வைப்புப் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | வீடுகளின் தகைமை களை உறுதிப்படுத்து வதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாத்தளை பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உள்நாட்டு மருத்துவ, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, சமூக சேவைகள் புத்த சாசன மற்றும் கலாசாரா உத்தியோகத்தர்களின் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளைப் பரீட்சித்த போது நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | சகல உத்தியோகத்தர் களாலும் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படும் விதத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உக்குவல பிரதேச செயலகத்தில் மீளாய்வாண்டில் ‘‘சபிரி கம’’ இன் கீழ் 211 அபிவிருத்தி திட்டங்களில் 152 திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடல் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களுக்குள் இடம்பெற்றதால் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு பொருத்தமான காலப்பகுதியொன்று பின்பற்றப் பட்டிருக்கவில்லை. | நிதிஏற்பாடு இறுதி காலாண்டின் போது கிடைத்த காரணத்தினால் கூடுதலான திட்டங்களை இறுதிக் காலாண்டில் மேற்கொள்ள நேர்ந்தது. | ஆண்டின் ஆரம்பத்தில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாத்தளை பிரதேச செயலகத்தின் 2020 ஆம் ஆண்டிற்காக நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட 177 செயற்திட்டங்களில் ரூபா 26,500,000 பெறுமதியான 27 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமல் அதற்காக வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக பொதுமக்கள் தேவைப்பாட்டின் பிரகாரம் கிராமிய முகவர்களால் இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாமல் இருந்தன. | சுற்றறிக்கையின் 08 ஆம் இலக்கத்தின் கீழ் முன்மொழிவுகள் முன்னுரிமையளிக்கப் பட்டுள்ளது. முன்னுரிமை குறிப்பிடப்படாத முன்மொழிவுகள் நிறைவேற்றபடாதிருந்ததுடன் அடுத்ததாக காணப்படும் முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டதாகவும் தொழில்நுட்ப சிக்கல் காரணமாக முன்மொழிவுகளை செயற்படுத்துவதில் சிக்கல்கள் உருவாகியதாகவும் | உத்தேச செயற்திட்டங்களை நிறைவேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

## 3.4 எதிர்பார்த்த விளைவு மட்டங்களை பெற்றுக் கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ரத்தொட்ட மாஉஸ்ஸாகல லாக்ஷா கிராமத்தில் பொது வசதிகள் நிலைய நிர்மாண செயற்திட்டத்தின் கலிமூடியை திறக்க முடியாமல் கொங்கிரீட் இட்டிருந்தமை, அலுமனியம் கதவுகள் மற்றும் யன்னல் என்பவற்றிற்காக பீடிங் பட்டி பொருத்தாமை தொடர்பில் கவனம் செலுத்தப்படாமல் கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | மேற்பார்வை தாமதம் என்பதை ஏற்றுக் கொள்வதுடன் தர அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதாக | செயற் திட்டத்தின் அனைத்து பகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்ட பயிற்சி பிரிவின் மூலம் கணனி இயலுமையை மேம்படுத்துவதற்காக 2020 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 4 செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை 1,846 திட்டமிடப்பட்டிருந்த போதும் 2020 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை உள்ளவாறான எண்ணிக்கை 216 ஆக இருந்தன. | நிதிஏற்பாடு வரையறுக்கப்பட்டமை மற்றும் கொவிட் 19 தொற்று வைரஸ் பரவல் தாக்கமளித்தததாக | எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாத்தளை ஹுலங்கமுவ தெற்கு – ஹெட்டியாவத்த ஊடாக அஸ்வதும கிராமத்திற்கு நுழையும் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் பாலம் திட்டத்தின் பிரகாரம் அகலம் மற்றும் வலது பக்க பகுதியின் நீளம் முறையே 16’ மற்றும் 26’ என திட்டமிடப்பட்டிருந்த போதும் பௌதீக பரிசோதனையின் போது அந்த அளவுகள் 13 அடி 8 அங்குலம் மற்றும் 22 அடி 8 அங்குலமாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் கைப்பிடி வேலி இடது பக்கம் 9.8 மீற்றராகவும் வலது பக்கம் 17.8 மீற்றராகவும் அமைக்கப்பட்டிருந்தது. | அவ்வாண்டிலேயே முழுமையாக பூர்த்தி செய்வதற்கு முடியாத போதும் 2020 ஆம் ஆண்டில் அதன் கைவேலி இட்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்ததுடன் மேலும் பரீட்சிப்பதற்கு குறித்துக் கொண்டதாக | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும். |

## 3.5 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடல்

---

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ------------------------------------------------ | ---------------------- | ------------------- |
| உகுவெல பிரதேச செயலகப் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஸ்மாட் ஸ்ரீ லங்கா பிரதேச பிரிவு மூலம் கிராம தரவு முகாமைத்துவ முறைமைக்கு தரவுகளை உட்படுத்துதல் மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதத்தின் பின்னர் நாளதுவரயாக்கப்பட்டிருக்கவில்லை. | இணையத்தள வசதிகளுக்காக மாதாந்த பட்டியல் கொடுப்பனவு செய்வதற்கு நிதி ஏற்பாடு 2020 ஆம் ஆண்டில் கிடைக்காமையால் நாளது வரையாக்க முடியாதிருந்ததாக | எதிர்பார்த்த செயன்முன்னேற்றத்தை நிறைவேற்றுவதற்கு செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

### 3.6 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட ரத்தொட்டை பிரதேச செயலக பிரிவின் மாஉஸ்ஸாகல லாக்ஷா கிராமத்தில் பொது வசதிகள் நிலைய நிர்மாணத்தின் எஞ்சிய வேலைப் பகுதியை பூர்த்தி செய்வதற்காக 2019 நவம்பர் 15 ஆந் திகதி முதல் 2019 திசெம்பர் 15 ஆந் திகதி வரைநீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 பெப்ரவரி 11 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை | உடன்படிக்கை காலப்பகுதிக்குள் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரத்தொட்டை பிரதேச செயலக பிரிவில் சபிரி கமக் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 3,000,000 பெறுமதியான 5 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்த வழங்கல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை | அளிப்புச் செய்யப்பட்ட உடன்படிக்கை காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பள்ளேபொல பிரதேச செயலகத்தினால் பள்ளேபொல நகர அபிவிருத்திக்காக காணி கையேற்றல் மற்றும் விஷல் நீர் வழங்கலின் கீழ் நீர் தாங்கிக்குப் பதிலாக அதற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்த போதும் காணியின் பதிவு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை | துரிதமாக காணிகளின் பதிவு செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றமடையாதிருந்த திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யட்டவத்த பிரதேச செயலகத்திற்கு கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தை பலப்படுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட தொகையில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 666,935 தொகை விளைவற்ற வகையில் காணப்பட்டன. | கிராம சக்தி மக்கள் சங்கத்தின் நிலைத்திரு தன்மைக்காக தேவைப்பாட்டின் பேரில் மாநகர சபையின் இணக்கப்பாட்டின் பேரில் பணம் விடுவிக்கப்பட்டதாகவும் 2020 கொவிட் தொற்று காரணமாக பயிற்சி செயற்பாடுகள் செயற்படுத்தப்படாமை மற்றும் பிரதான வங்கிக் கணக்கில் இயலளவு அபிவிருத்தி நிதியத்திற்குரிய பணம் காணப்படுவதுடன் வருடாந்தம் வட்டி சேர்தல் காரணமாக நிதியத்தின் அளவு அதிகரித்துள்ளதாக | கிடைத்துள்ள நிதிஏற்பாடுகளை ஆக்கபூர்வமாக செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | உக்குவல மற்றும் ரத்தொட்டை பிரதேச செயலக பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டில் ‘‘கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டம்’’ இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 26,642,202 ஆன கூரை தகரங்களும் உபகரணங்களும் விளைவற்றுக் காணப்பட்டன. | உகுவெல செயற்திட்டத்திற்காக தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உழைப்பினை பெற்றுக் கொள்ளல் சிரமத்தின் காரணமாக செயற்படுத்த முடியாமல் போனதாகவும் தேவையான உபபாகங்களை வழங்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளதாகவும் ரத்தொட்ட பிரதேச செயலகத்திற்கு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் கட்டுநிதி பெறுவனவு தாமதத்தின் பேரில் தேவையான உப பாகங்களை பெற்றுக் கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் கிடைக்கவில்லையென | கிடைக்கப்பெற்ற கூரை தகரங்களை பகிந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

## 3.8 ஏனைய

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தளை பிரதேச செயலகத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆடுகளைப் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது பட்டிகள் முறையாக நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. 2020 யூன் 07 ஆந் திகதி வரையிலும் 04 கன்றுகள் மரணித்திருந்ததுடன் மீண்டும் மூன்று புதிய கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசிற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 52,500 ஆகும். | ஆட்டுப்பட்டி அமைப்பது தொடர்பாக பயிற்சி வழங்கப்பட்டுள்ளாகவும் நிர்மாணிக்கப்பட்ட பிரகாரம் ஆட்டுப்பட்டி அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயற்திட்டம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . |

## 3.9 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரத்தொட்டை மாஉஸ்ஸாகல லாக்ஷா கிராமத்தில் பொது வசதிகள் நிலைய நிர்மாண செயற்திட்டத்திற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மட்டுப்படுத்தப்பட்ட / தேசிய கேள்வி கோரல் முறை பயன்படுத்தப்பட்டு பதிவு செய்யப்படாத ஒப்பந்தக்காரரல்லாத நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | மட்டுப்படுத்தப்பட்ட காலம் காரணமாக CIDA பதிவு இந்த அலுலகத்தின் மூலம் செயற்படுத்தப்படும் செயற் திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்த பங்களப்பு வழங்கிய மாவட்டத்தில் வதியும் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சந்தை ஒப்பீட்டு ரீதியில் விலை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரத்தொட்டை மாஉஸ்ஸாகல லாக்ஷா கிராமத்தில் பொது வசதிகள் நிலைய நிர்மாண செயற்திட்டத்தின் கிரய மதிப்பீட்டின் பிரகாரம் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய விதந்துரைகளுக்கு இணங்கவும் உரிய காலப்பகுதியில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் ஒப்பந்தக்காரர் தவறியிருக்கையில் ரூபா 3.5 மில்லியன் நிதிஏற்பாடு களிலிருந்து எஞ்சிய வேலை பகுதியை பூர்த்தி செய்வதற்காக பெறுகை செயற்பாட்டிற்கு புறம்பாக மீண்டும் அந்த ஒப்பந்தக்காரருக்கே வழங்கப்பட்டிருந்தது. | கேள்வி கோருவதற்கு போதியளவு காலம் இல்லாமல் இருந்ததுடன் மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்பந்தத்தை மேற்கொள்ள இணங்கியதால் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதாக | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அகரெந்த குளத்தை புனரமைப்பதற்கு உரிய பெறுகை அறிவித்தலின் பிரகாரம் உரிய துறையில் 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் 5 மில்லியனை மிகைத்த 03 செயற்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியிருத்தல், கடந்த மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றிய நிர்மாணங்களில் வருடாந்த இயலளவு குறைந்தது ரூபா 15 மில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் இந்த விடயங்களை உறுதிப்படுத்தாத ஒப்பந்தக்காரருக்கு பெறுகை வழங்கப்பட்டிருந்தது. | காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கால எல்லையின் பிரகாரம் அனைத்து பெறுகை ஒப்பந்த நிபந்தனைகளுக்கு உரிய தெரிவு செய்தல் கஷ்டமாக இருந்ததுடன் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் இயலுமை காணப்பட்ட குறைந்த கேள்வியை சமர்ப்பித்த ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதாக | உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவுசெய்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அகரென்த குளத்தை புனரமைப்பதற்குஉரிய பெறுகை அறிவித்தலின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த மூன்று ஆண்டுகளில் உரிய துறையில் பிரகாரம் உரிய துறையில் ரூபா 5 மில்லியனை மிகைத்த செயற்திட்டங்களுக்காக சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக்கொண்ட வேலைகள் பூர்த்தி சான்றிதழைப் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அத்தேவைப்பாட்டை நிறைவேற்றாதிருக்கையில் இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | அனைத்து பெறுகை நிபந்தனைளுக்குரிய ஒப்பந்தக்காரரை தெரிவு செய்தல் சிரமமாக இருந்ததாக | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் வேலை பூர்த்தி சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டும். |

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆசிரிய தொழிலுக்காக விடுவிக்கப்பட்டு கணக்காய்வு திகதி வரை 03 ஆண்டுகளுக்கும் 6 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டிருந்த காலப்பகுதியை விஞ்சியிருந்த கலேவல பிரதேச செயலகத்தின் 08 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 995,180 தொகை 2020 பெ்ரவரி 25 வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்த தவணையாக அறவிட்டு பணத்தை அனுப்புமாறு குறித்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | கல்வி அலுவலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டு குறித்த பணத்தை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | பள்ளேபொல பிரதேச செயலகத்தினால் 03 ஓய்வூதியம் பெறுவோரின் அடையாள அட்டை இலக்கங்கள் கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 23 ஆந் திகதி வரை தரவுகள் முறைமையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | அடையாள அட்டையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | ஓய்வுதியம் பெறுவோரின் கோவைகளை விரைவில் நாளது வரையாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவில் பேணிச்செல்லப்படும் கடன் காத்திருப்பு பட்டியலில் உத்தியோகத்தர்களின் கடன் வேண்டுகோள் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியை குறிப்பிடாமையால் காத்திருப்பு பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெயர்களின் தொடர் வரிசை ஒழுங்கின் சரியானதன்மையை உறதிப்படுத்த முடியவில்லை. | திகதியை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எப்பதாக | விண்ணப்பத்தை சமர்ப்பித்த திகதியில் தின முத்திரை பதிவு செய்யப்பட வேண்டும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் உள்ளடக்கப்பட்ட 08 நிகழ்ச்சிகள் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக நிதிஏற்பாடு இல்லாமையால் தாக்கமளித்ததாக | ஆண்டின் செயல் நடவடிக்கைத் உள்ளடக்கப்பட்ட நிகழ்ச்சிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 இன் செயன் முன்னேற்றத்தை கருத்திற் கொள்ளும் போது 05 நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய எவ்வித செயன்முன்னேற்ற மொன்றையும் காண்பிக்காமல் இருந்ததுடன் 08 நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக 50 சதவீதத்திற்கு குறைந்த செயன்முன்னேற்றமொன்றைக் காண்பித்தது. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட செயன் முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகத்தின் 21 பிரிவுகளுக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டின் பெறுபேற்றை குறிப்பிடும் போது 11 பிரிவுகள் தொடர்பாக மாத்திரம் செயன்முன்னேறம் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்குவதாக | அனைத்து பிரிவுகளினதும் செயன் முன்னேற்றத்தை உள்ளடக்க வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யட்டவத்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல் செயற்பாடுகள் தொடர்பான 12 சிக்கல்கள் தீர்வு செய்யப்படாதிருந்தன. | 14 பிரச்சினைகளில் 02 தீர்வு செய்யப்பட்டதாக | சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள் தீர்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | கலேவல மற்றும் நாவுல பிரதேச செயலக பிரிவுகளில் ரூபா 232,000 பெறுமதியான போஷாக்கு பொதிகளை பெற்றுக் கொள்ளாத 116 சந்தர்ப்பங்களுக்குரியதாக உத்தியோகத்தர்களால் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை காரணமாக இந்நலன்கள் தாய்மார்களுக்கு கிடைக்காமல் போயிருந்தன. | உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போனமை, பிரிவுகளிலிருந்து வெளியே சென்றிருந்தமையால் நலன்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை என | போஷாக்கு பொதிகளை பெற்றுக் கொண்டமைக்கான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகம் உட்பட அதன் கீழுள்ள 11 பிரதேச செயலகங்களில 1867 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 239 பதவி வெற்றிடங்களும் 18 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்கள் மற்றும் மிகை தொடர்பான தகவல்கள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு சமர்ப்பிப்பதாக | குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மிகையை அங்கீகரித்துக் கொள்வதற்கு அல்லது இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாத்தளை மாவட்ட செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் திட்டமிடல் (Supernumeraryׂ) பதவிக்காக ஒரே உத்தியோகத்தருக்கு என்ற வகையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அதற்கு மேலதிகமாக உதவிப் பணிப்பாளர் திட்டமிடல் (Supernumeraryׂ) பதவியொன்று மிகையாக பேணிச் செல்லப்பட்டு அதற்காக 2019 சனவரி முதல் 2020 திசெம்பர் வரை ரூபா 1,872,083 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | - மேற்படி - | மகை உத்தியோகத்தர்களை வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு மாற்றப்பட வேண்டும். |